# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் • திருவள்ளுவர் ஆண்டு 2057, - மார்ச் 7, 2026

Weekly E-paper • March 7, 2026




## ஓங்கி ஒலிக்கிறது ஒரு குரல்!

சுப. வீரபாண்டியன்

### மூன்றாம் உலகப்போருக்கு வழிவகுக்க வேண்டாம்!

எழில்.இளங்கோவன்

### பக்குவப்படாத வரை...

தலையங்கம்

### எடப்பாடியார் ஆளுமையா? டில்லிக்கு அடிமையா?

வழக்கறிஞர் இராம.வைரமுத்து

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ● திருவள்ளுவர் ஆண்டு 2057, - மார்ச் 7, 2026 Weekly E-paper ● March 7, 2026


# ஓங்கி ஒலிக்கிறது ஒரு குரல்!

**சுப. வீரபாண்டியன்**

தேர்தல் நெருங்கி விட்டது!

கூட்டணிப் பேச்சுவார்த்தைகள் ஒருபுறம், விருப்ப மனுக்கள் வாங்குவது மறுபுறம் என்று எல்லா பக்கங்களிலும் தேர்தல் பரபரப்பு தொற்றிக் கொண்டிருக்கிறது!



வரும் தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில், திமுக அணி, பாஜக அணி, விஜய் கட்சி என்று மும்முனைப் போட்டி உறுதியாகிவிட்டது! இவற்றைத் தவிர, சில சின்னச் சின்னக் கட்சிகளும், சுயேச்சைகளும் தேர்தலில் போட்டியிடுகின்றனர்!

திமுக கூட்டணியில், எந்தெந்தக் கட்சிக்கு எவ்வளவு இடங்கள், யாருக்கு எந்தத் தொகுதிகள் என்பன இன்னும் முழுமையாக, அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படவில்லை என்றாலும், அங்கு ஏறத்தாழ எல்லாம் முடிவாகிவிட்டன என்றே தெரிகிறது. இதோ கூட்டணி உடையப் போகிறது, இந்தக் கட்சி இங்கிருந்து விலகி விஜய் கட்சியுடன் சேரப் போகிறது, ஆட்சியிலும் அதிகாரத்திலும் பங்கு என்பதைத் திமுக ஒப்புக்கொண்டே ஆக வேண்டிய நிலை வரப்போகிறது என்றெல்லாம் என்னென்னவோ வதந்திகள் பரவின.

எல்லாவற்றுக்கும் முற்றுப்புள்ளி வைத்து, வெற்றிகரமாகக் கூட்டணிப் பேச்சு வார்த்தைகள் அங்கு ஏறத்தாழ நிறைவடைந்து விட்டன. 234 தொகுதிகளுக்கு திமுகவின் சார்பில் மட்டும் 15000 க்கும் மேற்பட்ட விருப்ப அணுக்கள் வந்துள்ளன. மிகப் பெரிய அளவிலான தேர்தல் சிறப்பு மாநாடு, வரும் திங்கள் கிழமை திருச்சிக்கு அருகில் நடைபெற இருக்கிறது!

என் டி ஏ கூட்டணி என்று அழைக்கப்படும் அந்தக் கூட்டணியில், இன்னும் கூட்டணிப் பேச்சு வார்த்தைகள் தொடங்கப்படவே இல்லை! அதிமுகவா, பாஜகவா - தலைமை தாங்கப் போகிற கட்சி எது என்பதைக் கூட உறுதியாய்ச் சொல்ல முடியவில்லை!

அதிமுக தான் தமிழ்நாட்டில் பெரிய கட்சி என்பது வெளிப்படை. ஆனால் மாநாட்டில் பெரியார் படத்தை நீக்கிவிட்டுத் தாமரை படத்தை வைக்கும் அதிகாரம் பாஜக கையில்தான் இருக்கிறது. அதிமுக கைகட்டி வேடிக்கைதான் பார்க்கிறது! அண்ணா, எம்ஜிஆர், ஜெயலலிதா படங்களையாவது வைத்துக் கொள்ள அனுமதித்திருக்கிறார்களே என்று ஆனந்தம் அடைகிறது!

தான் பேசிய எல்லா கூட்டங்களிலும், ஆட்சியிலும் அதிகாரத்திலும் பங்கு தருகிறோம் என்று விஜய் கூவிக் கூவி அழைத்தார்! ஆனால் இன்று வரையில் கூட்டணிக்கு ஒரு கட்சியும் வரவில்லை!

இன்னும் சில நாள்களில் தேர்தல் தேதி பற்றிய அறிவிப்பு வரவிருக்கும் சூழலில், திமுகவின் வெற்றிப் பயணம் தொடங்கி விட்டது என்றே தெரிகிறது!

நேற்று சென்னையில், மீண்டும் வெல்வோம், மீண்டும் மீண்டும் வெல்வோம் என்று சூளுரைத்திருக்கிறார் கழகத்தின் தலைவர் !

ஓங்கி ஒலித்த அவர் குரல், காற்றின் அலைகளில் கலந்து, நாடெங்கும் ஒலித்துக் கொண்டிருக்கிறது! ●

## வீர வணக்கம்!



தோற்றம் : 05.01.1947

மறைவு : 04.03.2026

பேராசிரியர் **சாமி.ஆரோக்கியசாமி** அவர்கள்

கனத்த இதயத்துடன்...

**தோழர் சுப. வீரபாண்டியன்**

தலைவர், திராவிட இயக்கத் தமிழர் பேரவை

மற்றும் இயக்கத் தோழர்கள்.

# மூன்றாம் உலகப்போருக்கு வழிவகுக்க வேண்டாம்!

எழில்.இளங்கோவன்

உலக சமாதானத்திற்கான நோபல் பரிசைத் தனக்கே வழங்க வேண்டும் என்று வலியவலிய கெஞ்சிக்கேட்டுக் கொண்டிருந்தவர் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப். அதற்கு அவர் சொன்ன காரணம், நடக்க இருந்த ஏழு போர்களை "கூடுதல் வரிவிதிப்பேன்" என்று 'மிரட்டி' தடுத்துவிட்டாராம். மிரட்டலுக்குப் பொருள் அமைதி என்பது அவரின் அகராதி போலும்.



டென்மார்க் தலைநகர் கோபன்ஹெகனில் நடந்த ஐரோப்பிய அரசியல் தலைவர்கள் மாநாட்டில், அல்பேனியாவுக்கும் - அஜர்பைஜானுக்கும் இடையில் நடைபெற்ற போரைத் தடுத்து நிறுத்தியதாகச் சொன்ன டொனால்ட் ட்ரம்பை "நடக்காதபோரை தடுத்து நிறுத்த டொனால்ட் ட்ரம்பால் மட்டும்தான் முடியும்" என்று அல்பேனியாவின் பிரதமர் எடிர்மாவே கிண்டலடித்துள்ளார்.

கனடாவை 51ஆவது மாநிலமாக இணைப்பேன் என்றும், கிரீன்லேண்டை அமெரிக்காவுடன் சேர்த்துவிடுவேன் என்றும் மிரட்டிப்பார்த்த ட்ரம்ப், வெனிசுலா மீது தாக்குதல் நடத்தி நியூயார்க்கில் விசாரணையை எதிர்கொள்ள அதன் அதிபர் நிக்கோலஸ் மதுரோவைக் கைது செய்தார் என்பதெல்லாம் அவர் 'கேட்ட' நோபல் பரிசுக்கு அளவுகோலோ என்னவோ தெரியாது, ஆனால் இப்பொழுது வளைகுடாவில் பற்றி எரியும் நெருப்புக்கும், பதற்றத்திற்கும் அவரே முழுக்காரணமாவார்.

**"அதாவது உலகின் மூன்றாவது இடத்தில் உள்ள எண்ணெய் வயல்கள் உள்ள பெரிய நாடு ஈரான். ஏறத்தாழ 208 பில்லியன் பீப்பாய்கள் கொண்ட கச்சா எண்ணெயைக்கையிருப்பில் வைத்துள்ளது. மத்திய கிழக்கின் எண்ணெய் இருப்பில் கால் பகுதியையும், உலக இருப்பில் 12% க்கும் அதிகமாகவும் கொண்டுள்ளது. நாளொன்றுக்கு 3.3 மில்லியன் பீப்பாய் எண்ணெய் உற்பத்தி செய்கிறது ஈரான். இந்த எண்ணெய் வளங்களைத் தன்மேலாதிக்கத்தின் கீழ் கொண்டுவர வேண்டும் என்பதுதான் அமெரிக்காவின் நோக்கம்"**

அணு ஆயுதங்கள் உருவாக்கத் தேவையான செறிவூட்டப்பட்ட யுரேனியம் ஈரானிடம் இருப்பதாகவும், அது அமெரிக்காவுக்குப் பெரும் ஆபத்தாக இருப்பதாகவும் சொல்லி, இஸ்ரேலுடன் இணைந்து ஈரான் தலைநகர் டெஹ்ரானைத் தாக்கியது அமெரிக்கா-இஸ்ரேல். இதில் ஈரானின் உயர்நிலைத் தலைவர் அயத்துல்லா அலி கொமெய்னி கொல்லப்பட்டதால், டெல்அவிவ், ஜோர்டான் உள்ளிட்ட இஸ்ரேலின் பகுதிகளையும், வளைகுடா நாடுகளின் பஹ்ரைன், கத்தார், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், குவைத் உள்ளிட்ட நாடுகளின் அமெரிக்க ராணுவ தளங்களையும் தாக்கிப் பெரும் பேரழிவையும், உயிரிழப்புகளையும் ஏற்படுத்தியுள்ளது ஈரான்.

ஒரு கேள்வி! ஈரானிடம் மட்டும்தான் யுரேனியம், அணு ஆயுதங்கள் இருக்கின்றனவா? பிறநாடுகளிடம் இல்லை என்று சொல்லமுடியுமா? வடகொரியா, சீனா, ரஷ்யா உள்ளிட்ட நாடுகளிலும் இருக்கின்றன. அதனால்

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## பக்குவப்படாத வரை...

"கடைவிரித்தேன்- பொருள், கொள்வோர் இல்லையே... கலக்கம் வராதோ, தோழி", என்று அன்றே ஒருபாடல் எழுதினார் கவியரசர் கண்ணதாசன். இன்று நடிகர் விஜய் 'கடைவிரித்த கட்சிக்கு' அது மிகக் கச்சிதமாகப் பொருந்திவிட்டது.

வாருங்கள் கூட்டணிக்கு!ஆட்சியில் பங்கு தருகிறேன், தொகுதிகளையும் நிறையத் தருகிறேன் என்று பனையூர் பங்களாவுக்குள் 'தவெக' கட்சி, என்ற கடையை விரித்த விஜய்க்கு மற்ற கட்சிகள் டாட்டா காண்பித்தன, தாங்கிரஸால் 04-03-2026 அன்று பட்டை நாமத்தைச் சாத்த வைத்து, நடிகரின் கடையை மூட வைத்தார் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின்.

"ஓம் சக்தி... பராசக்தி... திமுக தீயசக்தி" யாம். தஞ்சை, சிங்கிப் பட்டியில் இப்படிச் சிங்கியடித்துப் பேசியிருக்கிறார் அந்த மகா நடிகர்.

"ஓம்சக்தி...'ஜனநாயகன்'சக்தி,ஈரோட்டில்நாற்பதுஉயிர், பனையூருக்கு ஓடிய தீய சக்தி" - யார் என்று மக்களுக்குத் தெரியாதா?

கட்சி ஆரம்பித்தால் அரசியல் பேசவேண்டும். மக்கள் குறித்து, வளர்ச்சி குறித்துப் பேசவேண்டும். அதுவும் நாகரீகமாகப் பேசவேண்டும். இப்படி எதுவும் இல்லாத ஒரு தலைவராகிய நடிகரை நாடும் மதிக்காது மக்களுக்கான 'நடுவர்மன்றமும்' மன்னிக்காது.

ஒருதலைவனுக்குத்தலைமைப்பண்புவேண்டும். ரசிகர்களைக் கட்டுப்பாட்டுக்குள் வைக்க வேண்டும். விஜய் கூட்டம் போடுகிறார் என்றால், ஐயோ என்ன நடக்குமோ ஏது நடக்குமோ என்று பதறுகிறார்கள் மக்கள். தஞ்சாவூர் கூட்டத்தில் கூட விபத்தில் சிக்கினர் விஜய் ரசிகர்கள் என்று செய்தி வருகிறதே!

நடிகர்தவெகவிஜய் முதலில் அவரைச்சரிசெய்து கொள்ளட்டும். கட்சியைச் சரிசெய்து கொண்டு, ரசிகர்களைக் கட்டுப்படுத்தி அவர்களையும் சரிசெய்து கொண்டு, பகுதிநேர அரசியல்வாதியாக இல்லாமல் இருக்கப் பயிற்சி எடுக்க வேண்டும். பக்குவப்படாத வரை அவர் ஓர் அரசியல்வாதியாக இருக்க முடியாது!

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்

உதவி ஆசிரியர்:
வெற்றிச்செல்வன்

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408

## முன்பக்கத் தொடர்ச்சி...

ஈரானை அமெரிக்கா குறி வைப்பது அணு ஆயுதம் என்பதற்காக அல்ல, மாறாக அங்குள்ள எண்ணெய்க் கிணறுகளே அமெரிக்காவின் கண்களை உறுத்துகிறது.

வெனிசுலா, சவூதி அரேபியாவுக்கு அடுத்த இடத்தில்,

அதாவது உலகின் மூன்றாவது இடத்தில் உள்ள எண்ணெய் வயல்கள் உள்ள பெரிய நாடு ஈரான். ஏறத்தாழ 208 பில்லியன் பீப்பாய்கள் கொண்ட கச்சா எண்ணெயைக்கையிருப்பில் வைத்துள்ளது. மத்திய கிழக்கின் எண்ணெய் இருப்பில் கால் பகுதியையும், உலக இருப்பில் 12% க்கும் அதிகமாகவும் கொண்டுள்ளது. நாளொன்றுக்கு 3.3 மில்லியன் பீப்பாய் எண்ணெய் உற்பத்தி செய்கிறது ஈரான். இந்த எண்ணெய் வளங்களைத் தன்மேலாதிக்கத்தின் கீழ் கொண்டுவர வேண்டும் என்பதுதான் அமெரிக்காவின் நோக்கம், ட்ரம்பின் போர்வெறி.

எண்ணெய் கொண்டு செல்லும் கடல்வழி பாதையான ஹார்மோஸ் நீரிணையை மூடிவிட்டது ஈரான். விளைவு? கச்சா எண்ணெய் ஒரு பீப்பாய் 100 டாலருக்குமேலே உயரும். போக்குவரத்து பெரும்பாதிப்புக்கு உள்ளாகும், தொழில்கள் பாதிக்கப்படும், பொருள்களின் விலைவாசி மடமடவென உயரும் அபாயங்கள் இருக்கின்றன.

அனைத்தையும் விட மூன்றாம் உலகப்போருக்கு இது வழிவகுத்துவிடும் அபாயமும் இல்லாமல் இல்லை.

உலகமக்கள் அமைதியாக வாழவேண்டும்.

போரில்லா உலகம் வேண்டும். அதற்குத் தடையாக அமெரிக்காவின் டொனால்ட் ட்ரம்பும், இஸ்ரேலின் நெதன்யாகுவும் இருந்து கொண்டு ஆதிக்கம் செய்வது கண்டனத்திற்கு உரியது.

உலக நாடுகளும், ஐக்கிய நாடுகள் அவையும் ஈரான்-இஸ்ரேல்-அமெரிக்காவின் போரை நிறுத்தி அமைதி காணத் தேவையான முயற்சிகளைச் செய்ய வேண்டும் என்பது, இன்றையக் கட்டாயத்தேவை.


"புதியதோர் உலகம் செய்வோம் - கெட்டப் போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்" - புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார்!

# எடப்பாடியார் ஆளுமையா? டில்லிக்கு அடிமையா?

வழக்கறிஞர் இராம.வைரமுத்து

எம்.ஜி.ஆரால் அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் என்ற பெயரில் தொடங்கப்பட்ட அ.தி.மு.க என்ற கட்சி, அம்மையார் ஜெயலலிதா காலத்தில் அம்மா திராவிட முன்னேற்றக் கழகமாக மாறியது. தற்போது அக்கட்சி அமித்ஷா திராவிட முன்னேற்றக் கழகமாக உருமாறி உள்ளது. அந்த அளவுக்கு பாஜகவின் கிளைக் கழகம் போல் அ.தி.மு.க செயல்பட்டு வருகிறது.

அண்மையில் பிரதமர் மோடி பங்கேற்ற என்.டி.ஏ கூட்டணி பொதுக்கூட்டம் மதுரையில் நடைபெற்றது. பொதுக் கூட்டத் திடலின் முகப்பில் அமைக்கப்பட்டிருந்த தந்தை பெரியாரின் படம் பா.ஜ.கவின் வலியுறுத்தலால் சில மணி நேரங்களில் அகற்றப்பட்டு அதற்குப் பதிலாக தாமரைச் சின்னம் வைக்கப்பட்டது. தனது ஆட்சியையே தந்தை பெரியாருக்குக் காணிக்கை ஆக்கிய பேறறிஞர் அண்ணாவை தங்கள் கட்சியின் பெயரிலும், கொடியிலும் வைத்துக் கொண்டு, தந்தை பெரியாரின் படத்தை மாற்ற அனுமதித்த எடப்பாடி பழனிச்சாமி தான் பா.ஜ.கவின் அடிமைச் சேவகன் என்பதை மீண்டும் ஒரு முறை நிரூபித்துள்ளார்.



தேர்தலுக்குப் பின் அ.தி.மு.க ஆட்சி அமையும் என்று எடப்பாடி பழனிச்சாமி தொடர்ந்து கூறி வந்தாலும், பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா போன்றோர் என்.டி.ஏ ஆட்சி அமைக்கும் என்றே கூறுகின்றனர். இதற்கெல்லாம் மேலாக சென்னையில் பா.ஜ.க தேர்தல் அலுவலகத்தை திறந்து வைத்து பேசிய தமிழ்நாடு பா.ஜ.க தலைவர் நயினார் நாகேந்திரன் "சட்டப்பேரவை தேர்தலுக்குப் பின், பா.ஜ.கவில் இருந்து 20 - 30 பேர் சட்டமன்ற உறுப்பினர்களாக வருவார்கள். சிலர் அமைச்சர்களாகவும் ஆவார்கள்" என்று பேசியதும் குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாட்டில் என்.டி.ஏ கூட்டணிக்கு எடப்பாடி பழனிச்சாமி தலைமை தாங்குவதாக பெயரளவில் கூறப்பட்டாலும் மதுரை பொதுக்கூட்டத்திற்குப் பின்னர் அங்குள்ள ஹோட்டல் ஒன்றில் நடைபெற்ற என்.டி.ஏ கூட்டணிக் கட்சிகளின் ஆலோசனைக் கூட்டத்தில் எடப்பாடி பழனிச்சாமி பத்தோடு பதினோன்றாக அமர வைக்கப்பட்டிருந்தது, அக்கூட்டத்தை பா.ஜ.கவைச் சேர்ந்த ஒன்றிய அமைச்சர் பியூஸ் கோயல் தலைமையேற்று நடத்தியது, அதே நேரத்தில் அந்த ஹோட்டலுக்கு வெளியே அ.தி.மு.க மற்றும் அ.ம.மு.க தொண்டர்களுக்கிடையே ஏற்பட்ட மோதலில் அ.ம.மு.கவைச் சேர்ந்த ஒருவருக்கு மண்டை உடைந்தது, அக்கூட்டத்தில் தொகுதி பங்கீடு எட்டப்படாததால் புதுடெல்லிக்கு எடப்பாடி பழனிச்சாமி சென்றது போன்ற நிகழ்வுகள் உண்மையில் இக்கூட்டணியை தலைமையேற்று நடத்துவது பா.ஜ.க தான் என்பதை உறுதிப்படுத்துகிறது.

கொடநாடு கொலை - கொள்ளை வழக்கு, ஊழல் வழக்குகள் ஆகியவற்றை காரணம் காட்டி எடப்பாடி பழனிச்சாமியை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ள பா.ஜ.க அவர் மூலம் தமிழ்நாட்டில் தங்களின் பினாமி ஆட்சியைக் கொண்டு வரத் திட்டமிட்டுள்ளது. அதை மக்கள் மத்தியில் அம்பலப்படுத்தவே "இந்த தேர்தல் சென்னை அணிக்கும் டெல்லி அணிக்குமான மோதல்" என்று தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் தெளிவுபடுத்தியுள்ளார்.

தி.மு.க கூட்டணியை உடைக்கப் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட நிலையிலும் அவற்றை முறியடித்து 2019 முதல் அதே கூட்டணியை கட்டி காப்பாற்றி வருவதுடன், புதிய கட்சிகளையும் இணைத்து அக்கூட்டணியை வலிமைப்படுத்தியுள்ள பேராளுமையான மு.க.ஸ்டாலின் அவர்களை எதிர்த்து நிற்கும் தகுதி அடிமை எடப்பாடி பழனிச்சாமிக்கு இல்லை என்பதை தமிழ்நாட்டு மக்கள் உணர்ந்துள்ளனர்.

அந்த வகையில் இருநூறுக்கும் மேற்பட்ட தொகுதிகளில் வெற்றி பெற்று இரண்டாம் முறையாக மு.க.ஸ்டாலின் முதல்வராக பொறுப்பேற்றுத் தொடர்வார் என்பதே தமிழ்நாட்டு மக்களின் எண்ணவோட்டமாக இருக்கிறது. ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian